# நீதி அமைச்சகம்

# உரிமைகள் குறித்த பிரகடனம்

## காவலில் வைக்கப்பட்ட நபருக்கு வழங்கப்படுவது பிரெஞ்சு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 706-73-ன் கீழ் குற்றம்புரிந்த 16 வயதுக்கு மேற்பட்ட சிறார்கள், ஒரு பெரியவரோடு சேர்ந்து குற்றம் புரிந்தவர் அல்லது கூட்டாளி

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் நீங்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் உங்களுக்கு வழங்கப்பட வேண்டும்**.
**அது உங்கள் சிறந்த நலன்களுக்கு முரணானதாக அமையும் அல்லது விசாரணை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடும் என்று தோன்றாதவரையில், பெற்றோரின் பொறுப்பைக் கொண்டவர்கள் அதே தகவலைப் பெறுவார்கள்**.
**நீங்கள் காவலில் இருக்கும்வரை இந்த ஆவணத்தினை வைத்துக் கொள்ளலாம்**.

ஒரு பெரியவரோடு சேர்ந்து குற்றம் புரிந்தவர் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய கூட்டுக் குற்றச் செயல் அல்லது குற்ற நடவடிக்கைகளின் கீழான குற்றத்தை நீங்கள் செய்துள்ளீர்கள் அல்லது செய்ய முயன்றீர்கள் என்று சந்தேகிப்பதற்குரிய, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நம்பத்தகுந்த காரணங்கள் உங்களுக்கு எதிராக உள்ளதால், நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளீர்கள் என்று உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

நீங்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றத்தின் தன்மை, நாள் மற்றும் இடம் மற்றும் காவலில் வைக்கப் பட்டுள்ளதற்கான காரணங்களை அறிவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.

24 மணிநேரம் வரை நீடிக்கக்கூடிய இந்தக் காவலில் நீங்கள் இருக்கும்போது, இந்த உண்மைகள் குறித்து உங்களிடம் விசாரிக்கப்படும்.

இந்தக் காலக்கட்டத்தின் முடிவில், காவல் காலத்தினை மேலும் 24 மணிநேரத்திற்கு நீட்டிக்க அரசுக் குற்றவியல் வழக்கறிஞரோ (விசாரணை நீதிபதியோ அல்லது சிறார் நீதிமன்ற நீதிபதியோ) முடிவு செய்யலாம். தேவைப்படு ம்பட்சத்தில், காணொளி வாயிலாக, இந்தக் குற்றவியல் நீதிபதியின் முன்பு நீங்கள் ஆஜர்படுத்தப்படுவீர்கள். தே வைப்படும்பட்சத்தில், இந்தக் குற்றவியல் நீதிபதியின் முன்பு, காணொளி வாயிலாக நீங்கள் ஆஜர்படுத்தப்படுவீ ர்கள்.

விதிவிலக்காக, மற்றும் விசாரணைக்கான தேவைகளுக்குட்பட்டு அவசியமெனக் கருதினால், ஒவ்வொன்றும் 24 மணிநேரத்திற்கென - இரண்டு கூடுதல் நீட்டிப்புகள் வழங்குவது குறித்து, விடுவித்தல் மற்றும் காவல் நீதிபதி அல்லது விசாரணை நீதிபதியால் முடிவு செய்யப்படலாம்.

எவ்வாறாயினும், முதல் 48 மணிநேரத்தின் முடிவில் இன்னும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நியாயப்ப டுத்தினால், விடுவித்தல் மற்றும் காவல் நீதிபதி அல்லது விசாரணை நீதிபதி, அரசுக் குற்றவியல் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் காவலில் மட்டுமே இருப்பார் என்று முடிவு செய்யலாம். இது ஒரு மு றை மட்டும் 48 மணிநேரம் நீட்டிக்கப்படும்.

காவல் காலத்தின் முடிவில், அரசுக் குற்றவியல் வழக்கறிஞர் அல்லது விசாரணை நீதிபதியின் முடிவுக்கேற்ப, நீங் கள் இந்தக் குற்றவியல் நீதிபதியின் முன்பு ஆஜர்படுத்தப்படுவீர்கள் அல்லது விடுவிக்கப்படுவீர்கள். முதல் நேர்வி ல், பின்னர் அதே நாளில், இதே குற்றவியல் நீதிபதியின் முன்பு நீங்கள் ஆஜராவீர்கள். இதற்கென சிறப்பாக அமை க்கப்பட்ட சிறை வளாகங்கள் அந்த அதிகார எல்லைக்குள் இருந்து, உங்கள் காவல் 72 மணிநேரத்திற்கு மிகாமல் இருந்தால், நீங்கள் அடுத்த நாள், அதாவது காவல் காலம் முடிவுற்றதிலிருந்து அதிகபட்சம் 20 மணிநேரத்திற்குள் ஆஜராகலாம். உங்கள் காவல் 72 மணிநேரத்திற்கும் அதிகமாக இருந்தால், உங்கள் காவல் காலம் முடிவுறுகின்ற அதே நாளில் குற்றவியல் நீதிபதியின் முன்பு நீங்கள் ஆஜர்படுத்தப்படுவீர்கள்.

## மேலும், பின்வருவனவற்றுக்கான உரிமை உங்களுக்கு உள்ளது என்று உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது:

<u>**குறிப்பிட்ட நபர்களுக்குத் தெரிவிக்கப்படுதல்**</u>

உங்கள் பெற்றோர்கள் அல்லது பாதுகாப்பாளர்கள், அல்லது நீங்கள் ஒப்படைக்கப்பட்ட நபர் அல்லது சேவை நிறுவனத்திற்கு, நீங்கள் உட்படுத்தப்பட்டிருக்கும் காவல் நடவடிக்கை, நீங்கள் செய்ததாகக் கூறப்படும் குற்றத்தின் தன்மை, நாள் மற்றும் அது செய்யப்பட்ட இடம் ஆகியவை குறித்து தெரிவிக்கப்படும்.

நீங்கள் வழக்கமாக உடன்வசிக்கும், அல்லது உங்களின் நேரடிச் சந்ததி உறவினரான உங்கள் பெற்றோரில் ஒருவர், அல்லது உங்கள் சகோதரர்கள் அல்லது சகோதரிகளில் அல்லது உங்கள் பாதுகாப்பாளர் அல்லது உரிய பெரியவர் ஒருவரைத் தொடர்பு கொண்டு நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளது பற்றி தெரிவிப்பதற்கு நீங்கள் கேட்கலாம்.

நீங்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கும்கூட நீங்கள் தெரிவிக்கலாம்.

நீங்கள் வெளிநாட்டவராக இருந்தால், உங்கள் நாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கும் நீங்கள் தெரிவிக்கலாம்.

தீர்க்கமுடியாத சூழ்நிலைகள் இல்லாவரையில், நீங்கள் கோரியதிலிருந்து 3 மணிநேரத்திற்குள் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இருப்பினும், ஆதாரங்களை சேகரிப்பதற்கோ அல்லது பாதுகாப்பதற்கோ அல்லது ஒரு நபரின் வாழ்க்கை, சுதந்திரம் அல்லது ஒருமைப்பாட்டிற்கு ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கோ அவசியம் என்றால், அந்த அறிவிப்பு தாமதப்படுத்தப்படும் அல்லது வெளியிடப்படாது என அரசுக் குற்றவியல் வழக்கறிஞரோ (விசாரணை நீதிபதியோ, அல்லது சிறார் நீதிமன்ற நீதிபதியோ) முடிவு செய்யலாம். உங்கள் சட்டப்பூர்வப் பிரதிநிதிகளுக்கு அறிவிப்பதை ஒத்திப்போடுதல் என்பது, காவல் நடவடிக்கை நீட்டிக்கப்பட முடியும் எனில் 24 மணிநேரத்திற்கு மிகாமலும், காவல் நடவடிக்கை நீட்டிக்கப்பட முடியாது எனில் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்கும்.

உங்கள் காவல் காலம் 48 மணிநேரத்திற்கு மேல் நீட்டிக்கப்பட்டால், உங்கள் உறவினர்களுக்கும், நீங்கள் வேலை செய்யும் நிறுவனத்திற்கும் அறிவிக்கப்படுவதை ஒத்திப்போடுதல் என்பது, அதே காரணங்களுக்காக, விடுவித்தல் மற்றும் காவல் நீதிபதியால் (அல்லது விசாரணை நீதிபதியால்) உறுதிப்படுத்தப்படலாம்.

## ஒரு நபருக்குத் தெரியப்படுத்துதல்

நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படக்கூடிய ஒரு நபருக்கு, எழுத்து மூலமாகவோ, தொலைபேசி வாயிலாகவோ தெரிவிப்பதற்கு நேர்காணலின்போது நீங்கள் கோரலாம்.

காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்களுடன் இது ஒத்துப்போகவில்லை என்றாலோ அல்லது இது மேலும் ஒரு குற்றத்தைச் செய்வதற்கு ஏதுவாக அமையும் என்றாலோ, உங்கள் கோரிக்கையை ஏற்க விசாரணை அதிகாரி மறுக்கலாம். இத்தகவல் தொடர்பிற்கான நேரம், விதிமுறைகள் மற்றும் கால அளவினை அந்த அதிகாரி தீர்மானிப்பார். இத்தகவல் தொடர்பு, 30 நிமிடங்களுக்கு மிகாமல், அந்த அதிகாரி அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒரு அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும்.

உங்கள் காவல் காலம் 48 மணிநேரத்திற்கு மேல் நீட்டிக்கப்பட்டால், தூதரக அதிகாரிகளுக்கு தொடர்புகொள்ளக் கோரும் உங்கள் கோரிக்கையை விசாரணை அதிகாரி மறுக்க இயலாது.

## மருத்துவரால் பரிசோதிக்கப்படுதல்

காவல் காலம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தும் மற்றும் அது நீட்டிக்கப்படும்போதும், ஒரு மருத்துவரால் பரிசோதிக்கப்படும்படி நீங்கள் கோரலாம். உங்கள் காவல் காலம் 48 மணிநேரத்திற்கு மேல் நீட்டிக்கப்பட்டால், நீங்கள் ஒரு மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும் மேலும் ஒரு புதிய மருத்துவப் பரிசோதனையைக் கோருவதற்கான உங்கள் உரிமை உங்களுக்கு அறிவுறுத்தப்படும். உங்கள் பெற்றோர்கள், பாதுகாப்பாளர்கள் அல்லது நீங்கள் ஒப்படைக்கப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தால்கூட இந்தக் கோரிக்கைகள் எழுப்பப்படலாம்.

உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று உங்கள் வழக்கறிஞரும்கூட கோரலாம்.

## வாக்குமூலம் அளித்தல், கேள்விகளுக்குப் பதிலளித்தல் அல்லது மௌனமாக இருத்தல்

உங்கள் அடையாளத்தினை நிரூபித்தப் பிறகு, வழக்கு விசாரணைகளின்போது, பின்வருவனவற்றுக்கான உரிமை உங்களுக்கு உள்ளது:

- வாக்குமூலம் அளித்தல்,
- உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளித்தல்,
- அல்லது மௌனமாக இருத்தல்.

## உங்கள் சட்டப்பூர்வப் பிரதிநிதியை உடன் வைத்துக்கொள்ளுதல்

தேவையென தகுதிவாய்ந்த அதிகாரி கருதுவாரேயானால், வழக்கு விசாரணைகளின்போதோ அல்லது நேர்காணலின்போதோ, பெற்றோரின் பொறுப்பில் இருக்கும் ஒருவர் உங்களுடன் இருக்கலாம். பொருந்தும் நேர்வுகளில், உங்களுடன் இருப்பதற்கு மற்றுமொரு பெரியவரை நீங்கள் நியமிக்கலாம் அல்லது குற்றவியல் நீதிபதியால் நிய

மிக்கப்படும் ஒரு பெரியவர் உங்களுடன் இருக்கலாம்.

## ஒரு வழக்கறிஞர் உங்களுக்கு உதவுதல்

**ஒரு வழக்கறிஞர் உங்களுக்கு உதவ வேண்டும்**.

### வழக்கறிஞரைத் தெரிவு செய்தல்

நீங்கள் காவலில் வைக்கப்பட்டதிலிருந்து, வழக்கு விசாரணையின்போது எந்த நேரத்திலும், மற்றும் உங்கள் காவல் நீட்டிக்கப்படும்போது – இந்த நீட்டிப்பின் ஆரம்பத்திலிருந்து – நீங்கள் விரும்பும் ஒரு வழக்கறிஞரின் உதவியை நீங்கள் கோரலாம். உங்களால் ஒரு வழக்கறிஞரை நியமிக்க முடியாவிட்டாலோ அல்லது நீங்கள் விரும்பும் வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலோ, விசாரணை அதிகாரியோ அல்லது அரசுக் குற்றவியல் வழக்கறிஞரோ (விசாரணை நீதிபதியோ அல்லது சிறார் நீதிமன்ற நீதிபதியோ) உங்களுக்கு உதவுவதற்கு ஒரு வழக்கறிஞரைத் தானாக நியமிக்குமாறு கோருவர்.

உங்கள் பெற்றோர்கள் அல்லது பாதுகாப்பாளர், அல்லது நீங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நபர் அல்லது சேவை நிறுவனத்தால்கூட உங்கள் வழக்கறிஞர் நியமிக்கப்படலாம்.

### சட்ட உதவி மற்றும் மறுமொழி காலம்

நேர்காணலின் இரகசியத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கும் சூழ்நிலைகளின்கீழ் வழக்கறிஞர் உங்களை 30 நிமிடங்கள் சந்திக்கலாம். காவல் நீட்டிக்கப்படும்போது, மீண்டும் உங்கள் வழக்கறிஞரை சந்திப்பதற்கு நீங்கள் கோரலாம்;

நீங்கள் பங்குபெறும் வழக்கு விசாரணைகள், வாதப்பிரதிவாதங்கள், மறுகட்டமைப்புகள் அல்லது அடையாள அணிவகுப்புகள் ஆகியவற்றில், கோரிக்கையின்பேரில், அந்த வழக்கறிஞரும் கலந்து கொள்ளலாம்.

இந்நேர்வில், உங்கள் முதல் வழக்கு விசாரணையானது, உங்கள் அடையாளத்தைப் பற்றிய அம்சங்களுடன் மட்டுமே தொடர்புடையது என்றில்லாதவரையில், உங்கள் கோரிக்கை உங்கள் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டதிலிருந்து 2 மணிநேர கால அவகாசம் முடியும் முன்பு, உங்கள் வழக்கறிஞர் இல்லாமல், அது தொடங்கப்படாது. இருப்பினும், விசாரணையின் தேவைகளுக்கு உட்பட்டு அது அவசியமெனக் கருதினால், அரசுக் குற்றவியல் வழக்கறிஞர் அல்லது (விசாரணை நீதிபதியின்) அங்கீகாரத்தின்பேரில், உங்கள் வழக்கறிஞர் இல்லாமல்கூட, உங்கள் முதல் வழக்கு விசாரணை உடனடியாகத் தொடங்கப்படலாம்.

ஒரு வழக்கு விசாரணையோ அல்லது ஒரு வாதப்பிரதிவாதமோ நடந்துகொண்டிருக்கும்போது உங்கள் வழக்கறிஞர் வந்தால், உங்கள் வழக்கறிஞருடன் பேச உங்களை அனுமதிக்கும் வகையில், உங்கள் கோரிக்கையின்பேரில் அது இடைநிறுத்தப்படலாம்.

இருப்பினும், நீங்கள் எதிர்கொள்ளும் சிறைத்தண்டனை குறைந்தது ஐந்து வருடங்கள் எனில், கட்டாய காரணங்களுக்காகவும் மற்றும் விதிவிலக்கான அடிப்படையிலும், அதிகபட்சமாக 12 மணிநேரத்திற்கும், அதனை ஒருமுறை புதுப்பிக்கக்கூடிய காலத்திற்கும், உங்கள் வழக்கு விசாரணைகள் அல்லது வாதப்பிரதிவாதங்களில் உங்கள் வழக்கறிஞரின் உதவியை ஒத்திவைப்பதற்கு அரசுக் குற்றவியல் வழக்கறிஞரோ, விசாரணை நீதிபதியோ அல்லது விடுவித்தல் மற்றும் காவல் நீதிபதியோ முடிவு செய்யலாம்.

## ஒரு மொழிபெயர்ப்பாளரை உதவிக்கு வைத்துக்கொள்ளுதல்

உங்களுக்குப் பிரெஞ்சு மொழி பேசத் தெரியவில்லை என்றாலோ அல்லது புரியவில்லை என்றாலோ, உங்கள் வழக்கு விசாரணையின்போதும், உங்கள் வழக்கறிஞருடன் தொடர்புகொள்ளும்போதும், இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளரை உதவிக்கு வைத்துக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

## காவலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு விண்ணப்பித்தல்

சாத்தியமான காவல் நீட்டிப்பு குறித்து இந்தக் குற்றவியல் நீதிபதி முடிவு செய்யும்போது, அத்தகைய நடவடிக்கை நீட்டிக்கப்படக்கூடாது என்பதற்காக, அரசுக் குற்றவியல் வழக்கறிஞர், விசாரணை நீதிபதி, அல்லது விடுவிப்பு மற்றும் காவல் நீதிபதிக்கு நீங்கள் ஒரு கோரிக்கை வைக்கலாம்.

## உங்கள் வழக்கு தொடர்பான சில அம்சங்களைப் பார்வையிடுதல்

உங்கள் அல்லது உங்கள் வழக்கறிஞரின் கோரிக்கையின்பேரில், மிகப் பிந்தியதாக, எந்தவொரு காவல் நீட்டிப்புக்கும் முன்பு, பின்வருவன குறித்து நீங்கள் ஆலோசனை கேட்கலாம்:

- நீங்கள் காவலில் வைக்கப்படுவது குறித்த அறிவிப்பு;
- உங்களைப் பரிசோதித்த மருத்துவர் வழங்கிய மருத்துவச் சான்றிதழ்(கள்).
- உங்கள் வழக்கு விசாரணைகளின் நடவடிக்கைக் குறிப்புகள்.

## அரசுக் குற்றவியல் வழக்கறிஞருக்கு உங்கள் கருத்துரைகளை

## எடுத்துக்கூறுதல்

காவல் காலம் முடிவுற்றதிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு, ஒப்புகையுடன் கூடிய பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தபால் பெறப்பட்டது குறித்து எழுத்தர் அலுவலகத்திற்கு ஒரு அறிவிப்பை வெளியிடுவதன் மூலமாகவோ, வழக்கை உற்றுநோக்கும் பொருட்டு நடவடிக்கைகளின் கோப்பைக் குறித்து கலந்தாலோசிக்க, அரசுக் குற்றவியல் வழக்கறிஞரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

## தனியுரிமைக்கான உரிமை

தொழில்நுட்பக் காரணங்களுக்காக இது சாத்தியமற்றதாக இல்லாதவரையில், இந்த நடவடிக்கையின்போது, நீங்கள் உட்படுத்தப்படும் வழக்கு விசாரணைகள் படமாக்கப்படும். இந்த வழக்கு விசாரணைகளின் பதிவுகளை யாரும் ஒளிபரப்பக்கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன் கூட்ட நடவடிக்கைகள் அல்லது உங்களை அடையாளம் காண உதவும் வேறு எந்த அம்சத்தினையும் வெளியிடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள, தனியறையில் மறைவாக நடத்தப்படும், வழக்கு விசாரணையில் மட்டுமே இந்தப் பதிவுகள் ஒளிபரப்பப்படலாம்.